தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

## சல்மாவின் படைப்புலகம்

**முனைவர் போ. ஜான்சன்,** உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.

மின்னஞ்சல் முகவரி – johnsonn1988@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சல்மா என்ற பெண்ணிய படைப்பாளியின் இரு புதினங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் என்ற இரு படைப்புகளுக்குள்ளும் உள்ள ஒற்றுமையின் காரணமாக இவையிரண்டும் கட்டுரையின் களங்களாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இரு நாவல்களும் பெண்களின் அடக்கு முறைக்கு எதிரான ஆணின் கோட்பாடுகளைக் கேள்விகேட்கும் விதத்தில் அமைந்துள்ளது. இதில் வரும் கதாப்பாத்திரங்கள் தங்களை அதற்குள் இறுத்திக்கொண்டு மனம்புழுங்கி இருந்தாலும், விடுதலை என்ற ஒன்றிற்காக ஏங்கிக் கிடப்பவர்களாகவும், விடுதலையை யாரிடமும் கேட்டு பெற்றுவிடப்போவதில்லை, நாமே அதனை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற மனத்துணிவுடன் நடைபோடும் இருவித பெண்களைக் கொண்டுள்ளதாக அமைகிறது.

**கலைச்சொற்கள்**

சமயம் - ஆணாதிக்க மனோநிலை - கோட்பாடுகள் - எதிர்வினை (எதிர்வாதம்) - குடும்ப அமைப்பு - உடலியல் - எதார்த்தவாதம் - சாதி - கல்வி - இசுலாம் - திருமணம் - மனவெளி - பெண்மொழி - அடிமைத்தனம் - விடுதலை

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் சமயங்களால் வளர்க்கப்பட்ட தமிழ் இலக்கியத் தடம் மிகவும் பரந்துபட்டது. அதிலும் குறிப்பாக இசுலாமிய இலக்கியக் கழகங்கள், இசுலாமிய இயக்கங்கள் வழி வளர்த்தெடுத்தவர்கள் ஏராளம். இந்தியாவினைப் பொறுத்த அளவில் வங்க இலக்கியத்திற்கு அடுத்தபடிநிலையில் தமிழ்

இலக்கியத்திற்கு இசுலாமியர்களின் பணி கணிசமானது. புத்திலக்கியப் படைப்பாக்கத்தைப் பொறுத்தவரை தோப்பில் முகமது மீரான், களந்தை பீர்முகமது, நாகூர் ஆபிதீன், கீரனூர் ஜாகிர்ராஜா, எஸ். அர்ஷியா, மீரான் மைதீன், அப்துல் ரகுமான், மு.மேத்தா, இன்குலாப் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதிலும் பெண் படைப்பாளர்கள் என்பது அருகியே காணப்பட்டது. அதனைச் சமன் செய்யும் விதத்தில் சித்தி ஜுனைதா, தஸ்லிமா நஸ்ரின், சல்மா போன்றோர் இன்றைய இலக்கிய உலகை ஆட்சி செய்கின்றனர்.

"**காலத்துக்குக் காலம் இலக்கிய உலகிலே சர்ச்சைக்குரிய படைப்புகள் வெளிவருவது சகஜமே**"[1] என்ற கைலாசபதியின் கூற்றுக்கேற்ப மேற்குறிப்பிடப்பட்ட ஆளுமைகளுள் பெண் படைப்பாளராகிய சல்மாவின் படைப்பும் பல்வேறு இடர்களைக் கடந்து வந்தவை. அவரின் இரு நாவல்களையும் (இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள்) ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.

**சல்மா - நீரில் பூத்த நெருப்பு**

திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் 1967இல் பிறந்தவர் சல்மா. இயற்பெயர் ராஜாத்தி (எ) ரொக்கையா. கவிஞர் மற்றும் அரசியல் ஆளுமை என்ற இருவேறு ஆளுமைகளை உள்ளடக்கியவர். தொன்னூறுகளில் இவரின் எழுத்துலகம் வெளிப்படத் தொடங்கியது. அதற்கு முன்பு பொன்னம்பட்டி சிறப்பு ஊராட்சி மன்றத் தலைவியாகவும், தி.மு.கட்சி உறுப்பினராகவும், சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டவராகவும் அறியப்படுகிறார். தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவியாகவும் பணியாற்றியுள்ளார். இருப்பினும் தன்னுடைய முழுமையான பணியாக எழுத்துலகை ஆட்சி செலுத்திவருகிறார். இசுலாமியப் பெண்கள் பேசத் தயங்கும் விடயங்களை எடுத்துக்கொண்டு சமூகத்தில் தன்னுடைய படைப்புகளின் வழி வெளிப்படுத்தி வருகிறார்.

"**மதக்கட்டுப்பாடுகள் இறுகிப்போன சமூகத்தில் பிறந்த கவிஞர் சல்மா தனக்கு ஒவ்வாத கருத்தாக்கங்களுக்கான எதிர்விளைவுகளாகத் தன் படைப்பை உருவாக்குகின்ற சூழலில் கிடைக்கும் எதிர்விளைவுகள் கடுமையானதாக இருந்துள்ளன. அதையும் மீறி பொருட்படுத்தாமல் அவர் கவிதைகள், நாவல்கள் எழுதியது ஒரு பெண்ணுக்கான அடிப்படை சுதந்திர வெளியை உருவாக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்றுவரை அவர் களத்தில் அப்படியே இயங்கி நிலைப்பட்டிருக்கிறார். தமிழ்ப் படைப்புலகில் தனக்கான முத்திரை இடத்தையும் கவிஞர் சல்மா தக்கவைத்திருக்கிறார்**"[2]

**சல்மாவின் படைப்புகள்**

எழுத்தாளர் சல்மா பெண்களின் உடல்ரீதியான பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதி வருகிறார். அதிலும் குறிப்பாக இசுலாமியப் பெண்களை அடக்கி ஆளும் மதக்கோட்பாட்டை எதிர்த்து இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. யாரும் சொல்ல முடியாத வேதனைகளைத் தன்னுடைய எழுத்தின் வழிச் சமூகத்தில் நிலைநிறுத்த முயற்சிமேற்கொண்டுள்ளார். சல்மாவின் படைப்புகள் சமூகவெளியில் உண்டாக்கும் அதிர்வலைகள் சற்றும் எதிர்பார்க்க இயலாதவை. இவரின் படைப்புகள் ஆணாதிக்க விடுபடலுக்கானதாக மட்டுமின்றி, தாம் சார்ந்துள்ள சமயத்தோடும் தொடர்புபடுத்தப்படுகிறது. இதனால் அவர் சந்திக்கும் எதிர்வினைகள் ஏராளம். இருப்பினும் இசுலாமியப் பெண்களின் வாழ்வைப் புதினப்படுத்தும் ஓர் ஆளுமையாக அவர் இருந்துவருகிறார்.

அவரின் படைப்புகளாக, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், பச்சை தேவதை, தானுமானவன் (கவிதைத் தொகுதிகள்); இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் (நாவல்கள்); சாபம் (சிறுகதைத் தொகுப்பு); கனவுவெளிப் பயணம் (பயண இலக்கியம்) போன்றன வெளிவந்துள்ளன.

**படைப்பின் தாக்கம்**

சல்மாவின் படைப்புகளில் இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் இரண்டு நாவல்களும் சமீபகால நவீனத் தமிழ் இலக்கியத்தில் பெண் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள், குறிப்பாக குடும்ப அமைப்புகளில் அதன்பால் ஏற்படும் மன அழுத்தங்கள், ஏமாற்றங்கள், அதன்விளைவால் ஏற்படும் எதிர்வினைகள் என அத்தனையும் ஒட்டுமொத்தமாகத் தம்முடைய படைப்பில் கூறிச்செல்கிறார்.

மாமன், மச்சினன் என்ற உறவுமுறைப் பெயர்களோடு தமிழ்ச்சமூகத்தை ஒட்டி உறவாடிய இயல்பான வாழ்க்கை முந்தைய தலைமுறையோடு காணமல்போய்விட்டது. அருகில் இருப்பவனோடு பேசி மகிழ்ந்து இருக்க முடியாதவன் துர தேசத்தில் கடல்கடந்து நட்புகொண்டு நெருங்கி இருக்க முடியுமா? அதுபோல, இங்குள்ள பாரம்பரியத்தை அடியோடு பெயர்த்துவிட்டு அரேபிய சட்டத்திட்டங்களின் படி இங்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற மனோநிலையில் ஈடுபடுவதன் மூலம் பல்வேறு குழுக்களாக பிளவுபட்டு நிற்கும் சமூகமாக மாறி வருகிறது என்பதையும் பதிவு செய்கிறார்.

அதோடு மிகவும் குறிப்பாக பெண் உடல்மீதான ஆணின் அச்சுறுத்தல் (பெண்கள் கருத்தடை செய்யக்கூடாது) ஏற்கனவே தூக்கி சுமக்கமுடியாமல் கீழே

விழுந்தவளுக்கு மேலும் சுமையேற்றும் விதத்தில் அவளுக்கான சட்டத்திட்டங்கள் என வெளிப்படுத்தப்படுகிறது. **"நாம் கேரளாவிலாவது பிறந்திருக்கலாம்; முஸ்லிம் பெண்கள் படிப்பதற்கு வாய்ப்பிருந்திருக்கும்"**[3] எனக் கல்வி மறுக்கப்பட்டதன் எதிர்வினையாகத் தோன்றும் எண்ணங்கள் இவை அனைத்தையும் உடைத்துக்கொண்டு வெளிப்படும் பெண் மீது இச்சமூகத்தின் பார்வை எவ்வாறு பதிகிறது என்பதையும் தம்முடைய படைப்பில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

**படைப்பு மொழி**

எதார்த்தவகை புனைகதை என்றாலே மொழி, மொழிநடை, கதைமாந்தரின் உரையாடல்கள் என்பவை அவசியமானதாகிறது. இத்தகைய படைப்புகளில் நேரடியாகப் பொருள்தரும் அடிப்படையில்தான் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. கதை மாந்தர்களின் சமூகம், மதம், ஒழுக்க முறைகள், சடங்குகள், பண்டிகை விழாக்கள், சம்பிரதாயங்கள், அன்றாட நிகழ்வுகள், திருமணம், இறப்பு என்ற அனைத்தையும் சார்ந்து வரும் மொழியையே இப்புனைவு பேசுகிறது.

கவிஞர் சல்மாவின் படைப்புகள் அனைத்தும் பெண்மொழி சார்ந்தே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இசுலாமிய பெண்களின் மீதான வன்மமும், அதற்கான எதிர்வினையுமாகவே இவருடைய இரு நாவல்களும் அமைகின்றன. **"அண்மைக்கால நாவல்களில் முனைப்பாக இடம்பெறும் பிரச்சினைகளில் ஒன்று மனிதரின் ஒழுக்கப்பண்பு ஆகும். தனிமனிதக் கொள்கை முக்கியம் பெறத்தொடங்கிய கணத்திலே ஒழுக்கவியலும் பிரச்சினைக்குரியதாகு மென்பது கூறாமலே பெறப்படும். ஏனெனில் தனிமனிதவாதம் மாந்தர் கூட்டாக நடந்துகொள்வதைவிட, தனிப்பட்டவர்களின் நோக்கையும் போக்கையும் செயல்களையுமே பெரிதும் சிறப்பித்துப் பாராட்டுகிறது"**[4] என்ற கைலாசபதியின் கூற்று நினைவிற்கொள்ளத்தக்கது. தனிப்பட்ட பெண்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் ஒழுக்கங்களையுமே இரு நாவல்களும் முன்வைக்கின்றன.

இயல்பான மொழி வழக்கு கதையோட்டத்தை சரியாக நடத்திச்செல்கிறது. சிற்சில இடங்களில் இசுலாமிய விதிகள் அரபுமொழியின் மூலச்சொல்லில் கொடுக்கப்பட்டு அதற்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது. நூலாசிரியர் கவிஞராக இருந்தபோதிலும் கவிநடை என்பது நாவலில் எங்கும் மேலோங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சொல்லும் செய்தி, கதாப்பாத்திரம் இவற்றோடு ஒன்றிவிடுகிறது மொழி.

**இரண்டாம் ஜாமங்களின் கதை**

தமிழ் இலக்கியத்தில் சமீப காலத்தில் கவிதை, சிறுகதை என்ற தளங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் சல்மாவின் ஆளுமையை இரண்டாம் ஜாமங்களின் கதை என்ற நாவல் மேலும் அவரின் படைப்புகளுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. இந்நாவல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் வெளிப்பாடாகவே பல பெண்ணிய எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் துணிந்து தம்முடைய கருத்துகளை எடுத்துரைக்க இயலுகிறது.

இந்நாவல், பெண் உலகம் சூழ்ச்சி, அடிமைத்தனம், ஏமாற்றம், சுரண்டல் மற்றும் வலிகளால் சூழப்பட்டுள்ளது. இன்றைய குடும்ப அமைப்பில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இடம், அவர்களுக்கான கட்டுப்பாடுகள், சுதந்திரமின்மை, சமத்துவமின்மை பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது. மேலும், திருமண உறவின்மூலம் ஏற்படுத்தப்படும் உடல்சார்ந்த துன்பங்கள், மறுக்கப்படும் காமம், அவளைச் சுற்றி நிகழும் அத்துமீறல்கள் போன்ற பல்வேறு கூறுகளை உள்ளடக்கியுள்ளது. இப்படைப்பு கூறவிழையும் கருத்தினை இதற்கான முன்னுரையின் தலைப்பிலேயே **(மௌனத்தைப் பேசுதல்)** கூறிவிடுகிறார் சல்மா.

இந்நாவல் முழுக்க பல்வேறு குடும்பங்கள் (குறிப்பாகப் பெண்கள்) குறித்த கதையாடலாக அமைந்துள்ளது. பல்வேறு அத்தியாயங்களில் பல்வேறு குடும்பப் பின்னணியை மையமாக வைத்துக் கதை நகர்கிறது. இதனால் திறனாய்வாளர்கள் சிலர் இதனைப் பல சிறுசிறு கதைகளின் தொகுப்பு என்று கூறுவதும் உண்டு.

நாவலின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் குடும்ப வரைபடம் கதைமாந்தர்களை இனங்காண உதவுகிறது. ராபியா என்னும் சிறுமியின் குடும்பத்தை மையப்படுத்திக் கதை நகர்கிறது, கதையின் ஓட்டத்தில் பெண்களின் அகப்புற வாழ்க்கையையும், மன ஓட்டங்களையும், அவர்கள் பின்பற்றும் வாழ்முறைகளையும், அவர்களுக்கிடையே நடக்கும் போட்டி, பொறாமை, ஆசாபாசங்களையும் உள்வைத்து நகர்கிறது. வாழ்வில் தங்களுக்குக் கிடைக்கும் இன்பமான பொழுதுகள் ஆணாதிக்கத்தாலும், அவர்களால் விதிக்கப்பட்ட விதிமுறைகளினாலும் அழிவதைக் கண்டு பெண்கள் உள்ளூர புழுங்கும் மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. அதேசமயத்தில், "**தங்களுக்கான மகிழ்ச்சியை, மற்ற பெண்களை நக்கல், நகைச்சுவை செய்வதன்மூலமும், அவர்களின் உடலமைப்பைப் பற்றிய உரையாடலாகவும் அவை நிகழ்கின்றன**"[5]. தனக்குக் கிடைக்காத மகிழ்ச்சி மற்ற பெண்களுக்கும் கிடைக்கக் கூடாதென்ற மனப்போக்குடன் இருக்கும் பெண்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அது அவர்களின் ஒழுக்கம் சார்ந்த உரையாடல்களாக

முளைத்து அவமானம், புண்படுத்தும் நோக்கம் வரை நீள்கிறது. இதற்கான ஆயுதமாக ஆண்கள் வலியுறுத்திய மதக்கோட்பாடுகளைக் கையில் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். றைமா மட்டும் இந்த வெறுப்புக்கு இரையாகாமல் விதிவிலக்காகக் காட்டப்படுகிறாள். அன்பு, இரக்கம், தெளிந்த சிந்தனை கொண்ட வஹிதா கூட திருமணத்திற்குப் பிறகு மாறிவிடுவதும் நோக்கத்தக்கது.

இசுலாமிய சமூகத்தில் பெண்களின் நிலையினைக் குறிப்பிட்டு இந்நாவல் எழுதப்பட்டிருந்தாலும், மதத்தைத் தாண்டி அனைத்துப் பெண்களுக்கும் இக்கதை பொருத்திப்பார்க்க இயலுகிறது. கிராமப்புறப் பெண்களின் அன்றாட வாழ்க்கையை அந்த மொழிநடையோடு, கதையோட்டத்தைச் சிதைக்காத கதாப்பாத்திரங்களைக் கொண்டு முன்னெடுத்திருப்பது மிகச்சிறப்பாக அமைகிறது.

சல்மாவின் இந்த முதல்நாவல் பல்வேறு தளங்களிலும் பல்வேறு படைப்பாளர்களால் எதிர்க்கப்பட்டாலும் அவரின் எழுத்துலகம் போற்றப்படவேண்டியது அவசியமாகிறது.

**மனாமியங்கள்**

சல்மாவின் இரண்டாம் படைப்பு இந்நாவல். முதல்படைப்பில் கிடைத்த நெருக்கடியும், எதிர்வினைகளும் இரண்டாம் நாவலுக்கு வலுசேர்க்கும் விதத்தில் அமைந்தாலும், இசுலாமிய குடும்ப அமைப்புகளின் அவலநிலையையே இந்நாவலும் சுட்டிச்செல்கிறது. என்றுமே மாறாத வடுவாய் அமைந்துவிட்ட கோட்பாடுகள் நிறைந்த வாழ்க்கையை, பெண்கள் எதிர்கொள்ளும் உடல்ரீதியிலான அழுத்தத்தை எடுத்துரைக்கிறது.

கனவிலும் நனவிலும் பயம், துயரம் இரண்டும் துரத்திட சாஜிதா என்னும் சிறுமி சந்திக்கும் சொல்லமுடியாத சோகங்களைப் பதிவுசெய்கிறது மனாமியங்கள் நாவல். சாஜிதா மட்டுமல்ல, அவளின் தாய் மெஹருன்னிசா, நன்னி (பாட்டி), ஆசியா, நன்னி சுபைதா, பர்வீன் என்று அனைவருமே ஆணாதிக்க அடக்குமுறையாலும், மதவொழுக்கம் என்ற பெயரில் சுமத்தப்படும் கட்டுப்பாடுகளாலும் வாழ்வைத் தொலைத்தவர்களாகச் சுட்டப்படுகிறார்கள். இரண்டாம் ஜாமங்களின் கதை நாவலில் வரும் வஹிதா போன்று இந்நாவலில் சாஜிதா இடம்பெறுகிறார்.

குழந்தைத் திருமணம், கல்வி மறுப்பு, பெண்ணடிமைத்தனம், சுதந்திரக்காற்றும், வெளிச்சமும் இல்லாத வீடுகள் என்று வாழும் இசுலாமியக் குடும்பங்களை நாவல் முழுவதும் காணமுடிகிறது. என்ன உண்பது? உடுத்துவது? எங்கு செல்வது? என்ன செய்வது? எதைப்படிப்பது? என்பதையெல்லாம் பெண்களாக முடிவெடுக்க முடியாது.

ஆண்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதும், இச்சைகளைப் பூர்த்தி செய்வதும் மட்டுமே பெண்களின் கடமை. நன்னி, சுபைதா, மெஹர், சாஜிதா என்று மூன்று தலைமுறைப் பெண்களும் ஒரேமாதிரி வாழ்க்கையை வாழக்கற்றுக் கொடுக்கப்படுகின்றனர். அதுதான் தங்களுக்கு விதிக்கப்பட்ட கடவுளின் திட்டம் என்று நம்பவைக்கப்படுகின்றனர்.

நாவல் முழுவதும் மனம் பொருந்தாத உறவுகளே இருக்கின்றன. திருமணங்கள் சொர்க்த்தில் முடிவுசெய்யப்படுகிறது என்ற நினைப்பில் நடைபெறும் திருமணங்கள் வெற்றி நடைபோடுவதில்லை. ஜாதகம், பொருத்தம் என பல்வேறு படிநிலைகளைக் கடந்தே மணங்கள் முடிவாகின்றன. இருப்பினும் வாழ்க்கை வெற்றிப்பாதையில் அமைவதில்லை. இருமனங்கள் ஒத்து சேர்ந்து வாழும் காதல் வாழ்க்கையை இச்சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. குறிப்பாகப் பெற்றோர்கள், சாதி, மதம், கௌரவம் என்ற வீண்கொள்கைகளை மனத்தில் இறுத்தி, பிள்ளைகளைக் கொல்வதற்குக் கூட தயங்குவதில்லை. இவ்வாறான சமூக அவலத்தை இந்நாவலிலும் பதிவு செய்துள்ளார் சல்மா.

ஹசன் என்பவன் தன்னுடைய கோட்பாட்டிற்காக தன்னுடைய பிள்ளை சாஜிதாவின் வாழ்க்கையில் தலையிடுகிறான். அவளின் கல்விக் கனவுகளைக் கலைக்கிறான். ஆண் - பெண் என இருபாலர் படிக்கும் கல்லூரியில் மகளைச் சேர்க்க அவன் மனம் ஒப்பவில்லை. இருப்பினும் சாஜிதாவின் அத்தை பர்வீன் உதவியினால் கல்லூரியில் சேர்கிறாள். அவனுடைய கோட்பாட்டின் படி படிப்பும், காதலும் பெண்களுக்கு எதிரானது. அவனது மகன் அ்‘ரபிற்குக் கூட மதரஸா கல்வியை மட்டுமே போதிக்க விரும்புகிறான். அதோடு மட்டுமல்லாமல் இசுலாமியப் பெண்கள், பாத்திஹா ஓதக்கூடாது, சபுர் கழிவுக்கு வெளியே போகக்கூடாது, சினிமா பார்க்கக் கூடாது, தெருவில் நிற்கக் கூடாது, வீட்டைவிட்டு வெளியே போகும்போது புர்காவில் கண்கள் கூட வெளியில் தெரியக்கூடாது, உதட்டுச்சாயம் பூசக்கூடாது, ஒப்பனைகள் செய்யக் கூடாது, டி.வி. பார்க்கக் கூடாது, தர்காவுக்குப் போகக் கூடாது, கர்ப்பத்தடை செய்யக் கூடாது, “**பெண்கள் வெள்ளைநிறத் துப்பட்டி மட்டும் போடக்கூடாது. கண்கள் கூட வெளியே தெரியாத அளவிற்கு பர்தா போட்டுக்கொள்ள வேண்டும்**”[6] என பல்வேறு அறிவுரைகள் விதித்திருந்தான்.

தன்னுடைய நம்பிகைக்கையை மற்றவர்கள் மீது திணிக்கும்போது, “**இஸ்லாத்துல நாலு பொண்டாட்டி கட்ட சட்டம் இருக்கு. அரபு நாட்டுல வாழுலாக இன்னைக்கும்**”[7] என்று இசுலாமிய சட்டங்களையும், புனித நூலான குர்ஆனையும் துணைக்கு இழுத்துக்கொள்வான். மதமும் மார்க்கமுமே எல்லாமாக இருக்கிறது என்ற

கருத்துடையவனாக இருந்தான். தொழுகைக்குச் செல்லாமல் சினிமாவிற்குச் சென்ற மகன் அஷ்ரப் மீதான கோபத்தில் கூட **“தான் இறைநம்பிக்கையை வலுப்பபடுத்துவதில் (இபாதத்) யாரும் குறுக்கே நிற்கக் கூடாது என்ற எண்ணமே அவனுடைய மனத்தில் மேலோங்கியிருக்கும்”**[8]

பர்வீன் - ரஹீம் வாழ்க்கையில் ஏற்படும் கசப்பான சம்பவங்களும், பர்வீனுக்கு மூர்த்தியிடம் ஏற்படும் நட்பும், அதனை எதிர்க்கும் ஹசனும் என நாவலின் கதை நகர்கிறது, இதற்கிடையில் சிக்கித்தவிக்கும் சாஜிதாவும், அ‘ரப்பும் அடைந்த துயரங்கள் போன்றன நாவலின் கருவாக அமைகிறது. கூட்டை உடைத்துக்கொண்டு வெளிவரத் துடிக்கும் நம்பிக்கை நாயகிகளாக சாஜிதா, பர்வீன் போன்றவர்கள் வலம்வருகிறார்கள்.

**தொகுப்புரை**

சல்மாவின் படைப்புலகம் என்பது மிகச்சிறியதாக இருப்பினும் யாரும் எடுத்துக்கொள்ள அஞ்சுகின்ற, கூசுகின்ற கதைக்களங்களை எடுத்துக்கொண்டு சவாலான விதத்தில் அதனை நிகழ்த்திக் காட்டியிருப்பது வியப்பிற்குரியது. இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் என்ற இரண்டு நாவல்களிலும் இசுலாமிய பெண்களையே கருவாக எடுத்துக்கொண்டிருந்தாலும், ஒட்டுமொத்த பெண்களின் எண்ணப் பிரதிபலிப்பாகவே இருநாவல்களும் அமைந்துள்ளன. முதல் நாவலில் பல்வேறு குடும்பங்களில் உள்ள பெண்களின் வலியைப் பேசியவர், இரண்டாவது படைப்பில் ஒரு குடும்பத்தில் நடக்கக் கூடிய சம்பவங்களை இனங்கண்டு திறம்பட அமைத்துள்ளார்.

தன்னுடைய முதல் படைப்பின் மீது பல்வேறு விமர்சனங்கள் வீசப்பட்ட போதிலும், அதனைக் கண்டு துவண்டுவிடாமல் பல்வேறு படைப்புகளைப் படைத்தளித்துள்ள சல்மாவின் போரட்டக்குணம் அளப்பரியது. மேன்மேலும் அவருடைய பல்வேறு படைப்புகள் வெளிவரவேண்டிய சூழல் உள்ளது. அது உறுதியாக நடக்கும் என்ற நம்பிக்கையில் நடைபயில்வோம்.

**சான்றெண் விளக்கம்**


1. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 238
2. ப. வீரசுந்தரி, சல்மாவின் இரண்டாம் ஜாமங்களின் கதை பன்முகப்பார்வை, முன்னுரை
3. சல்மா, மனாமியங்கள், ப. 145
4. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 242

5. சல்மா, இரண்டாம் ஜாமங்களின் கதை, பக். 264, 338
6. சல்மா, மனாமியங்கள், ப. 25
7. சல்மா, மனாமியங்கள், ப. 30
8. சல்மா, மனாமியங்கள், ப. 96

**ஆய்வுக்குத் துணைநின்றவை**


1. கைலாசபதி, க., தமிழ் நாவல் இலக்கியம் (முதற்பதிப்பு, டிசம்பர் 2017), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
2. சல்மா, இரண்டாம் ஜாமங்களின் கதை (2004), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
3. சல்மா, மனாமியங்கள் (2016), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
4. வீரசுந்தரி, ப., சல்மாவின் இரண்டாம் ஜாமங்களின் கதை பன்முகப்பார்வை (2017), பல்லவி பதிப்பகம், ஈரோடு